**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 88** **நாள்: 16.06.2016**

## 2016-2017ஆம் ஆண்டின் முதல் அரையாண்டுக்கான சொத்துவரியினை செலுத்த பெருநகர சென்னை மாநகராட்சி அறிவிப்பு !

சென்னை மாநகர முனிசிபல் சட்டம், 1919, பிரிவு 104ன்படி, முதல் அரையாண்டுக்கான சொத்துவரியினை அரையாண்டின் முதல் 15 நாட்களுக்குள் (அதாவது 01.04.2016 முதல் 15.04.2016க்குள்) பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்திடவேண்டும். அவ்வாறு சொத்துவரி செலுத்தாதவர்கள் சொத்துவரி செலுத்த தவறியவர்களாக கருதப்படுவர்.

எனவே, சொத்துவரி செலுத்த தவறியவர்கள் உடனடியாக சொத்துவரியினை செலுத்தி சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் 1919, அட்டவணை IV, பகுதி VI, பிரிவு 138, 21 (1)ன்படி ஜப்தி நடவடிக்கையினை தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சென்னை மாநகராட்சிக்கு சொத்துவரியினை காசோலை அல்லது கேட்புக் காசோலை வாயிலாக **"வருவாய் அலுவலர், சென்னை மாநகராட்சி"** என்ற பெயரில் கீழ்கண்ட வகைகளில் செலுத்திடலாம் :

1) வரி வசூலிப்பாளர்கள் மூலம்,

2) சென்னை மாநகராட்சியின் இணைய தளம் www.chennaicorporation.gov.in வாயிலாக ஆன்–லைன் மூலம் கட்டணம் இல்லாமல் (Nil transaction fee),

3) சென்னை மாநகராட்சியுடன் ஒப்பந்தம் இயற்றியுள்ள வங்கிகளான இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, சிட்டி யூனியன் வங்கி, கரூர் வைஸ்யா வங்கி, எச்.டி.எப்.சி. வங்கி, ஐ.டி.பி.ஐ. வங்கி, கனரா வங்கி, தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கி, கொடாக் மகேந்திரா வங்கி, லஷ்மி விலாஸ் வங்கி மூலம் மற்றும் இன்டஸ்இந்த் வங்கி மூலம் பணமாகவும் செலுத்திடலாம்,

4) சென்னை மாவட்ட வட்டாட்சியர் அலுவலகங்கள், பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்து மண்டல அலுவலகங்கள், வார்டு அலுவலகங்கள் மற்றும் ரிப்பன் கட்டிட வளாகத்தில் உள்ள தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி.நிறுவனத்தின் சேவை மையங்களில் உள்ள முகப்புகளின் (Counters) மூலம்,

5) பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை குடிநீர் வாரியத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பொது வசூல் மையங்கள் மூலமும் செலுத்தலாம்.

மேலும், சொத்து வரி தொடர்பான பொதுமக்களின் கேள்விகள் / புகார்கள் / பரிந்துரைகள் ஆகியவற்றை 1913 என்ற இலவச தொலைபேசி எண் மூலமும், www.chennaicorporation.gov.in என்ற இணையதள முகவரியிலும் பதிவு செய்யலாம். பொதுமக்களின் கைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் விவரங்களை தகவல் தொடர்பிற்காக பதிவு செய்ய வேண்டும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு: மக்கள் தொடர்பு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி,**